செய்தி வெளியீடு எண்: 167 நாள்: 13.03.2013

தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 30.11.1978 முதல் தொடர்ச்சியாக ஏராளமான தொழிலாளர்கள், செவிலியர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள் போன்றோரை நல்ல ஊதியத்தில் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தி வருகிறது.

மேலும் அதிக அளவில் வேலை நாடுவோரை வெளிநாட்டில் பணியமர்த்தும் விதமாக இந்நிறுவனம் சார்பில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் வேலையளிப்பவரை தொடர்பு கொண்டு உரிய வேலைவாய்ப்புகளை சேகரிக்கும் முகவர்களை அயல்நாட்டில் நியமிக்க இந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஏனவே தகுதியுள்ள வெளிநாட்டு வேலையளிப்போரை பரிந்துரைக்கும் முகவராக பணியாற்றிட விரும்பும் வெளிநாட்டிலுள்ள அனுபவமுள்ள முகவர்கள், தங்களின் சுய விவரங்கள், கடந்த கால செயல்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கிய விண்ணப்படிவத்தினை முத்திரையிட்ட உறையில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசு நிறுவனம்), அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலைய வளாகம், எண் 42, திரு.வி.க. தொழிற்பேட்டை, ஆலந்து ர் ரோடு, கிண்டி, சென்னை 600032 என்ற முகவரிக்கு 19.03.2013க்குள் அனுப்புமாறும் மேலும் விவரங்களுக்கு www.omcmanpower.com என்ற வலைதளத்திற்கு வருகைபுரியும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9